347

பதிவு எண்— M 5720 வெள்ளிக்கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு.- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர்: இளவழகனார்.

கிளை–8 குருகுலம், மாம்பாக்கம்; மன்மத: பங்குனி ௰ 23—3—56 தளிர்–22

**திருக்குறள் பிழிவு:**

## நாட்டுக்கு நல்லது

'நாடு' என்பது குடிமக்கள் என்னும் பெயராலும் திருக்குறளில் வழங்குகின்றது: 'படை குடி கூழ் அமைச்சு' என்னும் பொருட்பாலின் முதற்குறளிலேயே 'குடி' என வந்தது நாடுதான்; 'குடி என்றது, 'அதனையுடைய நாட்டினை' எனப் பரிமேலழகர் உரை கூறுவார்.

ஆகவே, நாட்டின் இயற்கையமைப்பு எப்படிப் பட்டதானாலும் முக்கியமாகக் குடிமக்களின் சிறப்பே நாட்டுக்கு நலந்தரும் என்பது இனிது விளங்கும்.

அப்படியே, 'நாடு' என்னும் அதிகாரத்திலும், ஆசிரியர், குடி மக்களின் சிறப்பைப் பற்றி எடுத்த எடுப்பிற் பேசுகின்றார்· விளையுள் செய்வாரும் அறவோரும், அவ்விளையுளைப் பரவச்செய்து ஆக்கந்தேடும் வாணிகரும் சேர்வது நாடு என்று முதற் குறளில் விளக்குவார்; நற்குடிகளை இப்படிக் கருதிய பின்பே நாட்டின் இயற்கை நலங்களிலும் திருவள்ளுவரது கருத்துச் செல்கின்றது. முதலில் குடிமக்களைப் பேசியவர், நாட்டுக்கு அரசியல் அமைவும் தேவை என்பதை அதிகாரத்தின் கடைசி குறளிலேதான் 'வேந்து அமைதி இல்லாதநாடுபயனில்லை' என்னும்உண்மையையும்கூறுகின்றார். இந்நோக்கத்தைக் கவனித்தால் குடிமக்களுக்காகவே நாடும் அரசும் எல்லாம் என்னும் அழகிய கருத்துத் தானே வெளிப்படுகின்றது. அரசின் நோக்கம் குடிதழீஇக்கோலோச்சுதலே என்பதை வேறிடத்திலும் ஆசிரியர் கூறுவார்.

ஆதலால், நாட்டுக்கு நல்லது முக்கியமாய் நல்லமன்பதை; அடுத்தவைதாம், இயற்கை நலமும் நல்லரசுமெல்லாம் என்க.

# "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

8-ம் ஆண்டுக் கையொப்பம்
(28-10-55 முதல்)

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | ரூ. | 0 | 1 | 0 |
| ஆயுள்— | | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்;
மதுராந்தகம் P. O.
(தென்னிந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா"
—புறநானூறு.


| கிளை 8 | மன்மத, 23-3-56 | தளிர் 22 |
|---|---|---|


## வேடன் தாங்கல்

(தொடர்ச்சி)

இப் பறவைகள் வர மற்றொரு காரணம், அவற்றுக்கு வேண்டிய ஆகாரம் முழுவதும் அரை பர்லாங்கு தூரத்திலிருக்கும் மதுராந்தகம் ஏரியில் வசதியாகக் கிடைப்பதால் என்றுகூறலாம். இந்தக் கிராமத்தின் சீதோஷ்ணமும் அவற்றுக்கு ஏற்றதாய் இருக்கலாம். இவ்விதம் உணவும், காவலர்களுடனும் கூடிய வசதியான உறைவிடமும் கிடைப்பதாலேயே ஆண்டுதோறும் பறவைகள் கூடுகின்றன என்பது மிகையாகாது.

இப்பறவைகள் சாதாரணமாக ஜனவரி, பிப்பிரவரி துவக்கத்தில் முட்டைகளும் குஞ்சுகளும் பொரித்து ஆயிரக்கணக்கில் தங்கள் இனத்தை விருத்தி செய்து கொள்கின்றன.

இந்த ஏரிக்கரையில் சுற்றி வந்தால் மல ஜலம் நிறைந்த தண்ணீர் பச்சை நிறமாகக் காண்கிறது. ஒருவித (பறவைக் கவுல்) நாற்றமும் அடிக்கிறது. இந்நீரைக் கிராமவாசிகள் தங்கள் வயல்களுக்குப் பாய்ச்சுகிறார்கள். இதைவிட நல்ல எரு வேண்டுமா?

### எப்போது முதல்?

இந்தப்பறவைப் புகலிடம் பற்றி ஸ்ரீ ரெட்டியாரிடம் பல குறிப்புகள் இருக்கின்றன. நாட்டின் நலனுக்காக அவைகளை மிகவும் பத்திரமாகப் பாதுகாத்து வருகிறார். அவர் கூறியவை வருமாறு:—

வேடன் தாங்கலுக்கு ஓராண்டில் சுமார் இரண்டு முதல் மூன்று லட்சத்துக்கு மேல் பறவைகள் வருகின்றன. பிறகு இங்குப் புதியதாகப் பிறந்தவையும் சேர்ந்து கூட்டம் கூட்டமாக ஜனவரி முதல் பிப்பிரவரி மாதம் வரையில் லட்சக் கணக்கில் பறந்து செல்லுகின்றன. அப்படி பறந்து நம்முடைய எல்லையைக் கடந்து செல்லும்போது சிலர் சுடுவதுண்டு. அவ்வாறு 1939 ம் ஆண்டு சுட்ட பறவைகளில் ஒன்றின் காலில் மாஸ்கோ என்று ஒரு பில்லை இருந்தது. அதை நாங்கள் டாக்டர் ஜோஷ்வா (கிறிஸ்தவக் கல்லூரி அதிகாரி) யிடம் கொடுத்தோம். பல்லாண்டுகளாக அடிக்கடி அக் கல்லூரி மாணவர்கள் இப் பறவைகளைக் காண வருவதாலேயே அவரிடம் சேர்த்தோம்.

சென்ற வருடம் (16–7–55) இங்கு மழை பெய்தது. அடுத்த மாதம் (7–8–55) பறவைகள் கூட்டம் கூட்டமாக இங்கு வரக் கண்டேன்.

சமீபத்தில் நாராயணப் பறவையின் முட்டை ஒன்று கிடைத்தது. அது வாத்து முட்டையின் அளவில் நீல வர்ணமுடையதாய் இருந்தது.

கி. பி. 1796 -ம் ஆண்டு, இன்றுள்ள அபிவிருத்தி செய்யப்பட்ட "குளத்தில் சுடவும், பறவைகளைப் பிடிக்கவும் கூடாது" என்ற அதிகாரப் பத்திரமொன்று காணாமல் போய்விட்டது. பின்னர் கலெக்டராக இருந்த ஜே. த. டாட் என்பவர் கொடுத்த (கவுல்) பத்திரத்தில் "வேடன் தாங்கல் ஏரியில் கடப்பை மரங்களில் உட்காரும் பறவைகளைச் சுடவும் பிடிக்கவும் கூடாது" என்று பிளேஸ் துரை மூலம் அனுப்பிய அதிகாரப் பத்திரத்தைக்

முதனிலையாய் நின்றது.
புந்தி மொழிந்த -- புத்தியாகச் சொல்லப்பட்ட, 44
புலச்செந்நா -- புலமையுடைய செவ்விய நா. 21
புலமை -- பலவேறு வகைப் பட்ட நூலுணர்ச்சிகளை யெல்லாம் ஒருங்கே கொண்ட பேரறிவுடைமை. 31 (உ)
புலராது -- கெடாது, 3.
புலவர் -- நாயனுர்க்கே காரணப் பெயர், 34 (உ)
புலவர் திருவள்ளுவர், 34
புலன் -- நூலழகின் வகை, 45 (உ)
புலிக் கொடி, சோழனுடையது, 10 (உ)
புறத்திருள் நீக்க வெள்ளி வியாழன் இரவி திங்கள் பல உள்ளன, 52 [உ]
புனல் -- நீர்வளம், 21 புனற் கூடல்.
புனல் நாடு, சோழனுடையது, 10 [உ]
பூண்பால் -- பூணுதற் பகுதியுடைய, 27
பூர்வ வேதம் -- நான்மறை 2 [உ]
பெண்பால் -- பெண்பாற் கூற்று, 27
பெருஞ் சித்திரனுர், 32
பெரு நாவலர், 22
பொதிய மலை, பாண்டியனுடையது, 10 [உ]
பொய்ப்பால -- பொய்யின் பகுதியிற் பட்டவை 49
பொய்யாது -- பொய்யுருது விளங்கும் பொருட்டு 28
பொய்யா மொழி -- திருக்குறள்; தன் வழியின் ஒழுகுவார்க் குப் பயன் விளைவிலே பொய்படாத மொழியாகிய திருக்குறள், 23
பொருட்பேறு -- அற இன்பங் கட்குக் காரணமாதற் சிறப்புடையது, 39 [உ]
பொருநை நதி, சேரனுடையது 10 உ
பொருவில் -- ஒப்பில்லாத, 41
பொருவில் ஒழுக்கம் -- கொல்லாமை முதலியன, 41
பொருளணி -- நூலின் அணி வகை, 45 உ
பொள்ளென -- விரைவில், 52
பொன்முடியார், 14
போக்கியார், 26
போற்றி -- காப்பாற்றிவைத் திருந்து, 18
மங்கல முரசு, சேரனுடையது; தமிழரசர் மூவர்க்கும் பொதுவாயினும் சேரன் குடி மரபிற்கு உரிமை இயைந்தது. 10 (உ)

எளிதாய்-எளிய சொற்களை உடையதாகி, 24
எழுமை -- எழு பிறப்பு; வினைப் பயன் தொடர்தற்குரிய எழு பிறப்பு, 40 உ
எறிச்சலூர் மலாடனுர், 25
எறிந்த-வீசி அழித்த வென்ற என்னும் பொருட்டு. 50
என்ப -- என்று அறிவுடையோர் சொல்லுவர். 36
என்னும் -- என்று நினைத்துச் சேராள் 39

## ஏ

ஏகதேசரூபகம், 51 உ
ஏட்டின்புறத்து -- ஏட்டில், 15
ஏதம் இல் வள்ளுவர் -- குற்றமில்லாத திருவள்ளுவர், 32 பிற நூலாசிரியர்க் கெல்லாம் அவரெதிரிகளாலே மறுக்கப்பட்டு வரும் குற்றம்போல்வது இவர்க்கு இல்லை என்பது.
ஏழ்கடல் -- ஏழு கடல் நீரையும், 54
ஏனோருக்கு -- மற்ற அறியாதவர்களுக்கு, 7

## ஒ

ஒண் பால் -- நல்ல பால், 31
ஒண் பொருள் -- புகழொளி தரும் செல்வம், 26
ஒண்பொருள் -- ஒள்ளிய கருத்துக்கள், 32; உணர்வுடையோராலே விளம்பப்பட்ட நற்குணம்; ஒண்மை, உ
ஒண்மை -- இனிமை. 7 உ
ஒலியணி -- நூலின் அணி வகை 45 உ
ஒலிவடிவு--இதற்கு இடம் வானம் 14 உ
ஒலிவடிவு வரிவடிவு என இரண்டும் குறளுக்கு உண்டு 14 உ
ஒருக்க -- ஒற்றுமை செய்யும் படி. 1
ஒரு புடையொப்பு. 48 உ
ஒழிந்த பொருள் -- அடங்காது நின்ற பொருள். 22
ஒன்றும் -- பொருந்திநிற்கும் 20

## ஓ

ஓதிய -- நான்கு வேதங்களாலும் சொல்லப்பட்ட. 32
ஓது சீர் -- புகழப்படும் சீர் 35
ஓதும் -- அத்தியயனம் செய்து அறியப் படுகின்ற 44.
ஓர்வு -- அறிதல். 39
ஔவையார். 55

## க

கட்டுரைத்தார் – உறுதியுறக் கூறினர், 27

கடுகு – மிக்க சிற்றளவிற்கு எடுத்துச் சொல்லப்படுவதொரு நுண் பொருள் 54.

கண் – முகக் கண்; அகக் கண், 46

கண்டம் – சருக்கரை, 11

கதிர் – சூரியன், 48 உலகுக்கெல்லாம் பேரொளி.

கபிலர் – சங்கத்துப் புலவர், 5 (உ)

கமலம் – தாமரை, 48

கருத்துப் பொருள், 29 (உ)

கரும பூமி - இவ்வுலகம், 53 உ எவ்வுலகத்தார்க்கும் இவ்வுலகமே கரும பூமி,

கருவூர், சேரன் தலைநகர், 10 (உ)

கறங்கு – சூழ்கின்ற, 34

கல்லாடர், 9

கலை – (திங்கட்குப்) பதினறு கலை, (திருக்குறளில்) அறுபத்து நாலு கலை, 46

கவிசாகரப் பெருந்தேவனர், 36

கவுணியனர், 51

களத்தூர் கிழார், 44

கனவட்டம், சேரனது அரசப் புரவியின் பெயர், 10 (உ)

காகுசுரம் – குறிப்பொலி, 8 (உ)

காசிபர், திருமாலின் குறளவதாரம் தந்தவர், 14

காட்சிப் பொருள், 29 (உ)

காண்டற்கு – நோக்குதற்கு, ஆராய்ச்சி செய்தற்கு, 46

காந்தி – வெகுண்டு, 11

காமத்தின் பக்கம் – காமத்துப் பால், 27

காயத்திற்குக் குற்றம் – பிறன் மனை புணர்தல், உயிர்க் கொலை செய்தல், பழியூண் உணல், பிறர் பொருள் வெளவல்கள், 39 [உ]

காரணத்தைக் காரியமாக உபசரித்தார், 12 [உ]

காரிக் கண்ணனர் – காவிரிப் பூம்பட்டினத்தவர், 28

காரியத்தைக் காரணமாக உபசரித்தார், 39 [உ]

காவிரி நதி, சோழனுடையது 10 [உ]

காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனர்,

கான் – மணம், 14

கிளிச்சிறை – பொன்வகை, 30 [உ]

கிளைக்கு – தோண்டுந் தோறும், 81



பிற்கு உரிமை இயைந்தது- 10 உ

நாடா – நாடி உ

நாப் புலமை – நாவால் விளங்குகின்ற புலமை- 51

நாப் புலமை வள்ளுவனர் 15

நாமகள்- 2

நாமத்தின் வள்ளுவனர் – பெயர் பெற்ற திருவள்ளுவர்- 27

நாவிற்கு – வாக்கிற்கு- 39

நாற்பால் – நான்கு பகுதிப் பொருள்- 19

நீர்மைத்து – தண்மையுடைத்து- குணமுடையது- 46

நீர்மையது – குணம் உடையது- 3-

நூல் நயம்- 46

நூற்பொருளியல்பு- 28 உ

நெடு – வீறு ஓங்கும்- 50

நெடு மாற -50

நேரி மலை சோழனுடையது- 10 உ

நோக்கி – நோக்கினவன்- 21

## ப

பகரார் -- ஓதார்- 39

பண்டை மறை- 30; எப்பொருளும் யாரும் இயல்பின் அறிவுறச் செப்புதல் இவ் வேதத்திற்கு இல்லை.

பதி -- ஊர் 10

பயன் -- இம்மை மறுமை வீட்டு இன்பங்கள்- 46

பரணர்- 6

பரந்த பாவால் -- விரிந்த நூல்களால்: 29

பல் கலை - பல் நூல்கள்

பன்னிய - சொல்லப்பட்ட 38 51

பா - பாக்கள்: 10

பாடலம்: சோழனது அரசப் புரவியின் பெயர்: 10 உ

பாடலினல் - பாடல் தொழிலினல்: 19

பாடலினல் – பாடல் தொழிலினல், 19

பார் – இப் பூமியிலுள்ளோர், 18

பாரதம், 30; பாரதம் பழைய ராமகதையை ஒக்கும். 2

பாரதம் பாடிய பெருந்தேவனர், 30

பால்பகா அஃறிணைப் பெயர்: 54 உ

பார்விற்கு – நூல்களுக்குள்ளே 36

பான்முறை – முல்பால் நூல்: 38

பிணக்கில்லா -- பிணங்குதற்கு ஏதுவில்லா, 31

பிலிற்றும் – சொரிகின்ற, 3

பிறங்கு – விளங்குகின்ற, 34

புகட்டி – துளையுள் பெய்து, புகவிடு என்பது :புகட்டி' 54, என விகாரப் பட்டு

தெய்வத் திருவள்ளுவர் 44
தெள்ளமுது. 53
தெள்ளிய – முற்றுணர்ந்த. 52
தெள்ளிய வள்ளுவர். 52
தெள்ளுதல் – தெளிதல்; அறிவொப்புக் காண்டற்கு உரைத்ததனைத் தெள்ளுதல், ஒழுகுதல் இதனில் அடங்கும். 17 உ
தெறி சுக்கு – சிதைக்கப்பட்ட சுக்கு. 11
தென்னடு – பாண்டிய நாடு. 10 உ
தேவர் திருவள்ளுவர் – தேவராகிய திருவள்ளுவர். 41
தேவர்கள் – அவ்வுலகத்தவர் 53
மேற்பட்ட அறிவினையுடையவர்
தேவர் – திருவள்ளுவர். 8. 41
தேவிற்சிறந்த திருவள்ளுவர். 39
தேவின் – தெய்வ தன்மையால். 39
தேவு – தேவன். 8. தேவர்கள். 36
தேர்ந்து – ஆராய்ந்து. 38
தேனீக்குடிக் கீரனர். 49
தொலைவு இன்றி – ஒழிவு இல்லாமல்: 46
தொழிற் பெயர் மூற்றுப் பொருளில் வந்தது: 11 உ
தொன்மை – நூலின் அழகு வகை: 45 உ
தொடித்தலை விழுந்தண்டினர்- 22
தொங்கல் – மாலை- 14
தோல் – நூலழகின் வகை- 45 உ
தோற்ற – தன்னிடத்தே காட்ட- 18

ந

நயத்தின் பயன் – நயத்தால் விளைவதாகிய இனியபயன் 46
நயம் – மறுப்படாமை- மழுங்காமை- குறைவுறாமை- 46
நக்கீரர்- 7
நச்சிமனர்- 45
நத்தத்தனர்- 16
நப்பாலத்தனர்- 47
நரிவெரூஉத்தலையார்- 33
நல்கூர் வேள்வியார்- 21
நல்வினை – இதுவும் பிறவிக்கு ஏது- 51 உ
நவின்றோர்க் கினிமை 24 உ
நன்மொழி புணர்த்தல் 24 உ
நன்னெறி- 51
நாகன் தேவனர்- 12
நாடகத் தமிழ் – பாண்டியனுடையது; தமிழரசர் மூவர்க்கும் பொதுவாயினும்- பாண்டியன் குடிமர



கீரந்தையார், 19
குட நாடு, சேரனுடையது, 10 [உ]
குடி – ஒழிபியல், 26
குடைவார் – மூழ்குவோர், 12
குணம் – பண்பு; அதாவது இங்கே ஒன்றன் செயல்; செயலும் ‘தொழிற்பண்பு’ எனப்படுதலின்; 48
குலபதி நாயனர், 48
குறட்பா – சொற் சுருக்கமும் பொருள் விரிவும் உடையது, 54 [உ]
குறள் – திருக்குறள், 14, 33, 54, 55
குறள் – பால்பகா அஃறிணைப் பெயர், 54 [உ]
குறிப்புப் பொருள், 29 [உ]
குறிலகவல் தூங்கிசை, நூலின் வண்ண வகை 45 [உ]
குறுக – குறுகும் வண்ணம். 54
குறும் பா – குறட்பா, 47
கூடல் – தென்மதுரை, 21
கூடாரை – பகைவரை, 2
கூர்வேல் – சிறப்புப் பொருந்திய வேல், 19
கூழ் – பொருள், 26
கூறுபாடு – தொகை வகை விரி வகை, 8 [உ]
கேசி – திருமால், 21 (உ)
கேளாதனவெல்லாம் – பிற நூலாசிரியர்க்கெல்லாம் அறிந்து சொல்லுதற் கெட்டாதிருந்த அறம் முதலியவற்றின் நுட்பங்களெல்லாம், 50
கொடிஞாழன் மாணி பூதனர், 50
கொடை முரசு, பாண்டியனுடையது; தமிழரசர் மூவர்க்கும் பொதுவாயினும் பாண்டியன் குடிமரபிற்கு உரிமை இயைந்தது, 10 (உ
கொல்லி மலை, சேரனுடையது, 10 (உ)
கோதமனர், 15
கோரம், பாண்டியனது அரசப் புரவியின் பெயர், 10 (உ)
கோவூர் கிழார், 38

ச

சகசிர நாமம், 21 (உ)
சமயநூல் ஆறு – வியாசமதம், சைமினி மதம், பதஞ்சலி மதம், கபில மதம், கணாத மதம், அக்ஷபாத மதம்; அன்றிச்; சைவம் வைணவம் முதலியவற்றைக் கூறினுமாம். 44

சாதரூபம் – பொன் வகை 36 (உ)
சாதி சமயங்கள், கற்பித மானவை, 31 (உ)
சாம்புநதம் – தலைமையான சாம்புநதப் பொன், 36
சாலும் – போதும், 44
சாற்றிய – சொல்லப்பட்ட, 18
சிலவர் – சிலர், 34
சிலிஷ்டரூபகம், 53 (உ)
சிறுமேதாவியார், 20
சின்னுட் பல்பிணிச் சிற்றறி வுடையோர், 29 (உ)
சித்தலைச் சாத்தனுர், 10
சிந்தி, ஒரு கொடி (மருந்து வகை) 11
சிந்திநீர்க் கண்டம் – சிந்தி நீர்ச் சருக்கரை, 11
சுக்கு, 11
சுரக்கும் – பெருகும், 31
சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல் முதலிய அழகு கள். 13 (உ)
செஞ்சொல் – செவ்விய சொல், 47
செங்காப் போதார், 21
செப்பிய – சொல்லும்படிக்கு, 30
செம் பொருள். 29 (உ)
செம்மை நெறி – செவ்வை யான வழி, 40, விதியும் பத்தியும் ஞானமும் நோயா ளிக்கு மருந்தும் அநுபான மும் பத்தியமும் போல் ஒன் றற்கொன்று முரணுது கூடி நிற்கும் வழி.
செய்யா மொழி – வேதம்; ஒரு வராலே செய்யப்படாத மொழியாகிய வேதம், 23
செயற்பால – செய்யக் கட வன. 17
செயலூர்க் கொடுஞ் செங் கண்ணனுர், 42
செயிர்க் காவிரியார் மகனுர் சாத்தனுர். 41
சொல்லணி – நூலின் அணி வகை. 45 (உ)
சொல்லால் – சொல்லளவி னுல். 29
சொற் செறிவின் திட்பம். 15 (உ)
சொற் சுவை. 39
சொற் பொருள் நயங்களாலே இன்பம் விளைதல் 51 உ

## த

தகளி – அகல், 47
தடமுடி – பெரிய முடி . 10
தமிழ் வேதம் – திருக்குறள். 42. 43
தள்ளற்கரிய இருள் – பிறி தொன்றனுல் நீக்கப்படாத திருக்குறளால் மட்டும் நீக்கத்தக்க அஞ்ஞான இருள், 48
தறித்த – தறித்து வைத்தாற் போல்வது. 54 தறித்தா லன்ன எனற்பாலது தறித்த என இடை குறைந்து நின்றது.
தாது – பொடி. 32
தாமே – தாமோ. 32
மாலை. 10
பூமாலை. 32
தாள் – நாளம். 12
தாளார் மலர் – தாமரை மலர். 12
திரு – அருட் செல்வம். 1
உயர்வு. 1 உ 3 உ 39
திங்கள் – சந்திரன். 52
திண் படை – கடும் போரிற் பின் கொடாத திண்மை யுடைய படை. 26
திருத்தகு தெய்வத் திருவள்ளு வர் –அருட் செல்வமும் அதற்குத் தக்க தெய்வத் தன்மையும் உடைய திரு வள்ளுவர்;
தெய்வத் தன்மை – தெய்வத் தின் அவதாரமாய் விளங் குகை; தெய்வத் தன்மை யில்லார்க்கு அருள் உளதா யினும் அதனுல் பெரும் பயன் விளையாமையின், தகுதி சொல்லப்பட்டது. 1 உ
திருவள்ளுவர். 1. 3. 34. 39. 43
திருவள்ளுவ மாலை – திருக்குற ளின் சிறப்புப் பாயிரம்.
திருவள்ளுவமாலையுரை – திருத் தணிகைச் சரவணப் பெரு மாளையர் செய்தது. 53 உ
திறத்துப்பு – நூலின் திறத்திற் குத் தக்க நன்மை, 25
திறந்தொறும் – வகைகளோடு. 13.
திறம் – கூறுபாட்டை. 8
தொகை வகை விரிகள் உ
திறம் உற – வகைப்பட்ட. 38
தீஞ்சுவை. 53
தீதற்ருேர் – பொருளாராய்ச் சிக் கேற்ற நுண்ணறி வுடையோர். 24 உ
தீர்வு – இல்லை.முற்றுப் பொரு ளில் வந்தது 11
துப்பு – நன்மை. 25
துளைத்தல் – உள்ளீடு போக்கு தல். 54
துன்பத்தின் காரணம் – இது. விலக்குக் குறளால் விளங் கும். 35 உ
தூய துறவறம் – முப்பாற் பொருள்களினும் முத்திக் காரணமாதற் சிறப்புடை மையின் ‘தூய துறவறம்’ என்ருர். 25
தெய்வத் தன்மையால் வினைத் துயர் ஒழிதல். 51 உ

காட்டித் தடுக்கலாம் என்று கண்டிருந்தது. அப்பத்திரமும் காணாமல் போனதால். 8-1-1856 ம் ஆண்டு மிகவும் சிரமத்துடன் மறுபடியும் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.

1796-ம் ஆண்டு பழைய குளத்தை அபிவிருத்தி செய்வதற்கு முன்பே பல நூற்றாண்டுகளாகவே இங்குப் பறவைகள் வந்துகொண்டிருந் திருக்கின்றன என்பதற்குச் சில ஆதாரங்கள் இருக்கின்றன.

“தண்ணீர் வற்றிப்போனதும் பறவைகளின் கூடுகளைப் பார்த்திருக்கிறோம்; சுமார் பத்து, பதினைந்து வித்தியாசமான கூடுகளையும், மரப் பொந்துகளில் கூடு கட்டும் பல விதங்களையும் கண்டோம். இக்காரணங்களைக் கொண்டு இங்கு வரும் பறவைகள் குறைந்தது இருபது வகைப் பறவைகள் என்றும் கூறினார் ஸ்ரீ ரெட்டியார்.

### செய்ய வேண்டியதென்ன?

ஆண்டு பூராவும் பறவைகள் இருக்க வசதி செய்தால் பறவைகள் இருக்குமா? என்ற கேள்வி உண்டாகிறது. இந்த வேடன்தாங்கல் ஏரியை நான் பார்த்தபோது பூராவும் நிறையவில்லை. கலங்கல் மட்டத்திற்குச் சுமார் இரண்டடி குறைவாகவே இருந்தது. ஆனால், வளையபுத்தூர் ஏரியும், மதுராந்தகம் ஏரியுமோ பல மாதகாலமாகப் பூரணமாக நிரம்பிக் கலங்கல் வழியே உபரித் தண்ணீர் வழிந்து வீணாகிக் கொண்டிருந்தது. இவ்விதம் வீணாகப் போகும் தண்ணீரை வேடன் தாங்கல் ஏரிக்குத் திருப்பி ஏற்கெனவே பறவைகளின் எரு கலந்திருக்கும் வேடன் தாங்கல் ஏரித் தண்ணீருடன் சேர்த்து, அதனை மற்ற ஏரிகளுடன் மறுபடி கலக்கச் செய்தால், நல்ல எருக்களுடன் இதர நிலங்களும் பாய உபயோகமாக இருக்கும். இதன் மூலம் பறவைகளையும் அதிக மாதங்கள் வேடன்தாங்கலில் தங்கத் தூண்டலாம். மேலும் அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் வேடன் தாங்கலுக்குச் செல்ல நல்ல ரஸ்தாவும், இளைப்பாறும் விடுதிகளும் பறவைகளை ஆராய்ச்சி செய்ய நல்லதோர் உண்மையான குழு ஒன்றும் இங்கு அமைத்தல் அவசியம்.

பெரிய வலை ஒன்று கட்டிச் சில பறவைகளைப் பிடித்து இவற்றின் காலில் “இந்தியா” என்ற தகடுகள் கட்டி, இந்த ஆராய்ச்சியாளர் விட்டுவிட வேண்டும். சில பறவைகளைப்பிடித்துச் சென்னை மிருகக் காட்சி சாலையிலிருக்கும் குளத்தில் அவை தங்க ஏற்பாடுகள் செய்து, அதன் மூலமும் ஆராய்ச்சி செய்யலாம். பத்திரிகைகளில் இவ்விடத்தில் வரும் பறவைகளைப் பற்றியும், நாம் எடுத்துக் கொண்டிருக்கும் ஏற்பாட்டின் நோக்கத்தைப் பற்றியும் விளம்பரம் செய்ய வேண்டும். இந்தியாவிலும் ஆயிரக்கணக்கான பறவைகளுக்குக் காலில் தகடுகள் கட்டிவிட்டால், இன்னும் இரண்டாண்டில் எந் நாட்டுப் பறவைகள் இந்தியாவுக்கு வருகின்றன வென்றும் நம் நாட்டுப் பறவைகள் எந் நாடுகளுக்கு எந்தக் காலங்களில் செல்கின்றன என்றும் தெரிந்துகொள்ளலாம்.

பல்லாண்டுகளாகக் கிராமவாசிகள் பார்ப்பதால், ஆகாய விமானத்தை விட, பறவைகளுக்கு வேகம் அதிகம் என்று கூறுகிறார்கள்.

இவ்வளவு வேகமாகப் பறக்கக் கூடிய பறவைகள் ஏன் காசியிலிருந்து இரண்டு மணி நேரத்தில் திருக்கழுக்குன்றம் வரக் கூடாது என்று சிந்திக்க வேண்டிவருகின்றதன்றோ!

‘சு’

### மேலும் சில குறிப்புகள்:

வேடன்தாங்கல் பறவைகள் சரணாலயம் செங்கல்பட்டு ஜில்லா மதுராந்தகம் தாலுக்காவில் இருக்கிறது. இந்தியாவிலேயே ஏன், உலகத்திலேயே—என்று சொல்லப்படும் இணையற்ற இது, சென்னையிலிருந்து 54 மைல் தூரத்திலிருக்கிறது.

### உலகத்துப் பறவைகள்

74 ஏக்கர் விஸ்தீரணமுள்ள ஏரியின் நடுவில் 500 கடப்பை மரங்கள் இருக்

சாதருபம் – பொன் வகை 36 (உ)
சாதி சமயங்கள், கற்பித மானவை, 31 (உ)
சாம்புநதம் – தலைமையான சாம்புநதப் பொன், 36
சாலும் – போதும், 44
சாற்றிய – சொல்லப்பட்ட, 18
சிலவர் – சிலர், 34
சிலிஷ்டரூபகம், 53 (உ)
சிறுமேதாவியார், 20
சின்னுட் பல்பிணிச் சிற்றறி வுடையோர், 29 (உ)
சீத்தலைச் சாத்தனுர், 10
சீந்தி, ஒரு கொடி (மருந்து வகை) 11
சீந்திநீர்க் கண்டம் – சீந்தி நீர்ச் சருக்கரை, 11
சுக்கு, 11
சுரக்கும் – பெருகும், 31
சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல் முதலிய அழகு கள். 13 (உ)
செஞ்சொல் – செவ்விய சொல், 47
செங்காப் போதார், 21
செப்பிய – சொல்லும்படிக்கு, 30
செம் பொருள். 29 (உ)
செம்மை நெறி – செவ்வை யான வழி, 40, விதியும் பத்தியும் ஞானமும் நோயா ளிக்கு மருந்தும் அநுபான மும் பத்தியமும் போல் ஒன் றற்கொன்று முரணுது கூடி நிற்கும் வழி.
செய்யா மொழி – வேதம்; ஒரு வராலே செய்யப்படாத மொழியாகிய வேதம், 23
செயற்பால – செய்யக் கட வன. 17
செயலூர்க் கொடுஞ் செங் கண்ணனுர், 42
செயிர்க் காவிரியார் மகனுர் சாத்தனுர். 41
சொல்லணி – நூலின் அணி வகை. 45 (உ)
சொல்லால் – சொல்லளவி னுல். 29
சொற் செறிவின் திட்பம். 15 (உ)
சொற் சுவை. 39
சொற் பொருள் நயங்களாலே இன்பம் விளைதல் 51 உ

## த

தகளி – அகல், 47
தடமுடி – பெரிய முடி . 10
தமிழ் வேதம் – திருக்குறள். 42. 43
தள்ளற்கரிய இருள் – பிறி தொன்றனுல் நீக்கப்படாத திருக்குறளால் மட்டும் நீக்கத்தக்க அஞ்ஞான இருள், 48
தறித்த – தறித்து வைத்தாற் போல்வது. 54 தறித்தா லன்ன எனற்பாலது தறித்த என இடை குறைந்து நின்றது.
தாது – பொடி. 32
தாமே – தாமோ. 32
மாலை. 10
பூமாலை. 32
தாள் – நாளம். 12
தாளார் மலர் – தாமரை மலர். 12

திரு – அருட் செல்வம். 1
உயர்வு. 1 உ 3 உ 39
திங்கள் – சந்திரன். 52
திண் படை – கடும் போரிற் பின் கொடாத திண்மை யுடைய படை. 26
திருத்தகு தெய்வத் திருவள்ளு வர் –அருட் செல்வமும் அதற்குத் தக்க தெய்வத் தன்மையும் உடைய திரு வள்ளுவர்;
தெய்வத் தன்மை – தெய்வத் தின் அவதாரமாய் விளங் குகை; தெய்வத் தன்மை யில்லார்க்கு அருள் உளதா யினும் அதனுல் பெரும் பயன் விளையாமையின், தகுதி சொல்லப்பட்டது. 1 உ
திருவள்ளுவர். 1. 3. 34. 39. 43
திருவள்ளுவ மாலை – திருக்குற ளின் சிறப்புப் பாயிரம்.
திருவள்ளுவமாலையுரை – திருத் தணிகைச் சரவணப் பெரு மாளையர் செய்தது. 53 உ
திறத்துப்பு – நூலின் திறத்திற் குத் தக்க நன்மை, 25
திறந்தொறும் – வகைகளோடு. 13.
திறம் – கூறுபாட்டை. 8
தொகை வகை விரிகள் உ
திறம் உற – வகைப்பட்ட. 38
தீஞ்சுவை. 53
தீதற்ருேர் – பொருளாராய்ச் சிக் கேற்ற நுண்ணறி வுடையோர். 24 உ
தீர்வு – இல்லை.முற்றுப் பொரு ளில் வந்தது 11
துப்பு – நன்மை. 25
துளைத்தல் – உள்வீடு போக்கு தல். 54
துன்பத்தின் காரணம் – இது. விலக்குக் குறளால் விளங் கும். 35 உ
தூய துறவறம் – முப்பாற் பொருள்களினும் முத்திக் காரணமாதற் சிறப்புடை மையின் 'தூய துறவறம்' என்ருர். 25
தெய்வத் தன்மையால் விளைத் துயர் ஒழிதல். 51 உ

காட்டித் தடுக்கலாம் என்று கண்டிருந்தது. அப்பத்திரமும் காணமல் போனதால். 8-1-1856 ம் ஆண்டு மிகவும் சிரமத்துடன் மறுபடியும் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.

1796-ம் ஆண்டு பழைய குளத்தை அபிவிருத்தி செய்வதற்கு முன்பே பல நூற்றுண்டுகளாகவே இங்குப் பறவைகள் வந்துகொண்டிருந்திருக்கின்றன என்பதற்குச் சில ஆதாரங்கள் இருக்கின்றன.

"தண்ணீர் வற்றிப்போனதும் பறவைகளின் கூடுகளைப் பார்த்திருக்கிறோம்; சுமார் பத்து, பதினைந்து வித்தியாசமான கூடுகளையும், மரப் பொந்துகளில் கூடு கட்டும் பல விதங்களையும் கண்டோம். இக்காரணங்களைக் கொண்டு இங்கு வரும் பறவைகள் குறைந்தது இருபது வகைப் பறவைகள் என்றும் கூறினர் ஸ்ரீ ரெட்டியார்.

## செய்ய வேண்டிய தென்ன?

ஆண்டு பூராவும் பறவைகள் இருக்க வசதி செய்தால் பறவைகள் இருக்குமா? என்ற கள்வி உண்டாகிறது. இந்த வேடன்தாங்கல் ஏரியை நான் பார்த்த போது பூராவும் நிறைய வில்லை. கலங்கல் மட்டத்திற்குச் சுமார் இரண்டடி குறைவாகவே இருந்தது. ஆனல், வளையபுத்தூர் ஏரியும், மதுராந்தகம் ஏரியுமோ பல மாதகாலமாகப் பூரணமாக நிரம்பிக் கலங்கல் வழியே உபரித் தண்ணீர் வழிந்து வீணுகிக் கொண்டிருந்தது. இவ்விதம் வீணுகப் போகும் தண்ணீரை வேடன் தாங்கல் ஏரிக்குத் திருப்பி ஏற்கெனவே பறவைகளின் எரு கலந்திருக்கும் வேடன் தாங்கல் ஏரித் தண்ணீருடன் சேர்த்து, அதனை மற்ற ஏரிகளுடன் மறுபடி கலக்கச் செய்தால், நல்ல எருக்களுடன் இதர நிலங்களும் பாய உபயோகமாக இருக்கும். இதன் மூலம் பறவைகளையும் அதிக மாதங்கள் வேடன்தாங்கலில் தங்கத் தூண்டலாம். மேலும் அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் வேடன் தாங்கலுக்குச் செல்ல நல்ல ரஸ்தாவும், இளைப்பாறும் விடுதிகளும் பறவைகளை ஆராய்ச்சி செய்ய நல்லதோர் உண்மையான குழு ஒன்றும் இங்கு அமைத்தல் அவசியம்.

பெரிய வலை ஒன்று கட்டிச் சில பறவைகளைப் பிடித்து இவற்றின் காலில் "இந்தியா" என்ற தகடுகள் கட்டி, இந்த ஆராய்ச்சியாளர் விட்டுவிட வேண்டும். சிலபறவைகளைப்பிடித்துச் சென்னை மிருகக் காட்சி சாலையிலிருக்கும் குளத்தில் அவை தங்க ஏற்பாடுகள் செய்து, அதன் மூலமும் ஆராய்ச்சி செய்யலாம். பத்திரிகைகளில் இவ்விடத்தில் வரும் பறவைகளைப் பற்றியும், நாம் எடுத்துக் கொண்டிருக்கும் ஏற்பாட்டின் நோக்கத்தைப் பற்றியும் விளம்பரம் செய்ய வேண்டும். இந்தியாவிலும் ஆயிரக்கணக்கான பறவைகளுக்குக் காலில் தகடுகள் கட்டிவிட்டால், இன்னும் இரண்டாண்டில் எந் நாட்டுப் பறவைகள் இந்தியாவுக்கு வருகின்றன வென்றும் நம் நாட்டுப் பறவைகள் எந் நாடுகளுக்கு எந்தக் காலங்களில் செல்கின்றன என்றும் தெரிந்துகொள்ளலாம்.

பல்லாண்டுகளாகக் கிராமவாசிகள் பார்ப்பதால், ஆகாய விமானத்தை விட,பறவைகளுக்கு வேகம் அதிகம் என்று கூறுகிறுர்கள்.

இவ்வளவு வேகமாகப் பறக்கக் கூடிய பறவைகள் ஏன் காசியிலிருந்து இரண்டு மணி நேரத்தில் திருக்கழுக்குன்றம் வரக் கூடாது என்று சிந்திக்க வேண்டிவருகின்றதன்றே!

'சு'

## மேலும் சில குறிப்புகள்:

வேடன்தாங்கல் பறவைகள் சரணுலயம் செங்கல் பட்டு ஜில்லா மதுராந்தகம் தாலுக்காவில் இருக்கிறது. இந்தியாவிலேயே ஏன், உலகத்திலேயே— என்று சொல்லப்படும் இணையற்ற இது, சென்னையிலிருந்து 54 மைல் தூரத்திலிருக்கிறது.

## உலகத்துப் பறவைகள்

74 ஏக்கர் விஸ்தீரணமுள்ள ஏரியின் நடுவில் 500 கடப்பை மரங்கள் இருக்

கின்றன. அந்த மரங்களின் அடிப்பாகங்கள் தண்ணீரில் அமிழ்ந்திருக்கின்றன. இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து, சில சமயங்களில் ஐரோப்பாவிலிருந்தும் ரஷியாவிலிருந்தும் பல விதமான பறவைகள் இங்குப் பறந்துவருகின்றன. இங்குக் காணப்படும் பறவைகள், இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் மட்டுமன்றி, அமெரிக்கா உள்பட, உலகின் பல்வேறு பகுதிகளிற் காணப்படுகின்றன, ஒரு சமயம் இங்குச் சுட்டு வீழ்த்தப்பட்ட பறவையின் மீது 'மாஸ்கோ' என்று அடையாளமிடப்பட்ட வளையமொன்றிருந்தது.

பல்வேறு இடங்களிலிருந்து நீர்ப் பறவைகள் செப்டெம்பருக்கும் பிப்பிரவரிக்கும் இடையே இங்கு வந்து சேருகின்றன. மார்ச் மாதம்வரை இங்குத் தங்குகின்றன. ஏரி வற்ற ஆரம்பிக்கையில், அதாவது ஏப்பிரலில் அவை இவ்விடத்தை விட்டுச் சென்றுவிடுகின்றன.

சுமார் 150 வருடத்திற்கும் மேலாக வேடன்தாங்கல் பறவைகள் சரணாலயம் இருந்து வருகிறது. வேடன்தாங்கல் என்ற பெயர் பழமையானதென்று கூறப்படுகிறது. 'வேடன்' என்பதற்கு 'வேடர்கள்' என்பதோடு மட்டுமன்றி 'ஒருவிதமான பறவை' இனத்தையும் குறிக்கும், என்றும் 'தாங்கல்' என்பதற்குத் 'தங்குமிடம்' 'புகலிடம்' என்று அர்த்தமென்றும் கூறப்படுகிறது. ஆகவே வேடன் தாங்கலுக்குப் பறவைகள் சரணாலயத் தொடர்பு பழமையானதென்றும் இதினின்றும் தெரிய வருகிறது.

'ராஜஸ்தானில் பறவைகள் சரணாலயம் ஒன்று இருக்கிறது. அது சிறியது. வேடன்தாங்கலிலோ ஏரியின் நடுவில் பயத்துக்கு இடமில்லாமல், நல்ல பாதுகாப்புடன் கூடிய 500 மரங்கள் உள்ள இடத்தைப் புகலிடமாகப் பறவைகள் கொண்டுள்ளன. ஆகவே இதை ஈடு இணையற்றதென்றே கூறலாம்.

'தி'

## திருவடி மணி மண்டபம்

மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையில்தாம் பெற்ற திருவடி ஞானத்தைச் சென்னைக்கு அருகில் விளங்கும் திருக்கழுக்குன்றத்தில் உலகம் உய்யும்பொருட்டு நிறுவியருளினார். திருப்பெருந்துறையையும் அங்கே நினைவு கொண்டு, திருக்கழுக்குன்றத்தையும் இணைத்து இந் நிகழ்ச்சிக்கு ஆதாரமாக ஒரு தனிப் பதிகமும் பாடியருளினார்.

இதனால் திருக்கழுக்குன்றம் இறைவன் திருவடித் தலமாய்த் திகழ்கின்றது: மலைச்சாரலில் அதற்கு ஒரு புனித இடம் உள்ளது; ஞான பீடமாய் விளங்கும் அந்தப் புனித இடத்தில் திருக்கழுக்குன்றம் செல்வோர் அனைவரும் சிறிது நேரம் தங்கி உருக்கங் கொள்கின்றனர்.

திருப்பெருந்துறையில் திருவடி பெற்றதற்கு மாணிக்கவாசகரே திருக்கோயில் நிறுவினார்; ஆனால், தாம் பெற்ற திருவடிகளை அவர் அங்கே வைக்கவில்லை; அங்குள்ள ஆலயம், நினைவுக்காகத்தான்; உலகம் உய்வதற்காக என்று அவர் அவற்றை உண்மையில் வைத்த இடம் திருக்கழுக்குன்றமே. அப்புனிதத் திருவடி வைப்புக்குத் தக்க மணிமண்டப அமைப்பு இம் மலைச்சாரலில் இன்னும் அமையவில்லை; சிறிய அளவில் ஓர் அடையாளம் மட்டும் இப்போது உள்ளது.

திருவடி ஞானம் என்பது தியான நிலைக்கு உரியது; அக வழிபாட்டில் சிறப்புறுவது. அம்முறைமைக் கேற்றபடி ஓர் அழகிய மணிமண்டபம், அமைதியும் ஆற்றலும் வாய்ந்த இம் மலைச்சாரலில் அமைந்தால், உலகத்துக்கு அது தக்கதோர் ஞான பீடமாய்த் திகழும். திருக்கழுக்குன்றம் செல்வோரில் அகவழிபாட்டில் ஆர்வம் உடையோர்க்குப் பேருதவியாய் இருக்கும்.

Phone 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட் மார்க்.

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்,
63, கிடங்குத் தெரு, சென்னை 1.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்)